**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 72 of 2024

DATE : 22.07.2025

Depositions of witness for Prosecution

PW: 2

| | | | |
|---|---|---|---|
| Name | ஆனந்தராஜ் | Caste | |
| Father/Husband's Name | பால்ச்சாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of July 2025

**(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை : –**

நான் துலுக்கப்பட்டியில் வசித்து வருகிறேன். நான்  விவசாயம் செய்து வருகிறேன்.  அ.சா.1 ஐ ராமமூர்த்தி எனக்கு தெரியும். வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை.  வழக்கில் விபத்தில் காயமடைந்த நபரை திருவல்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் சென்று பார்த்த பொழுது மயக்க நிலையில் இருந்தார். மேல்சிகிச்சைக்காக மதுரை சென்றார்.  என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். கையெழுத்து அ.சா.ஆ.2  ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு சாட்சியை**

**குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. அனுமதியின்பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை : –**

கடந்த 04.08.2020 ம் தேதி முத்துக்குமாரபுரம் ரோட்டில் மாலை 4 மணிக்கு வழக்கின் இறந்த நபர் இருசக்கர வாகனத்தை நிறுத்திக்கொண்டு பேசிக்கொண்டு இருந்தார் என்றும் அப்பொழுது மேற்கிலிருந்து கிழக்காக அந்த வழியாக வந்த ஆட்டோ அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்து சரவணன் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றும், விபத்தில் அவருக்கு தலையிலும், இடது கையிலும் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டது என்றும், காயப்பட்ட அவரை திருவலிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தோம் என்றும், இது சம்பந்தமாக அ.சா.1 புகார் கொடுத்த பொழுது அந்த புகாரின் நான் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றும், மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு சேர்த்தோம் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –** இல்லை.

**மறு விசாரணை : –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு